


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.12.2025) தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 98 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளம் மற்றும் புதிய மீன் விதைப் பண்ணை ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், மீனவர் நல வாரியத் தலைவர் முனைவர் அ. ஜோசப் ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என்.சுப்பையன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர் க.வி.முரளிதரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (8.12.2025) தலைமைச் செயலகத்தில், மறுசீரமைக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவர் நீதியரசர் வீ.பாரதிதாசன், உறுப்பினர்கள் டி.எஸ்.இராஜசேகர், ஏ.பி.மகாபாரதி, முனைவர் எஸ்.நடராஜன், கே. மேக்ராஜ், டாக்டர் பெரு.மதியழகன் (குருமபுரி), டாக்டர் எஸ்.பி.சரவணன் (மதுரை), ஆணையத்தின் உறுப்பினர் செயலாளர்/ பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் டாக்டர் சீ.சுரேஷ்குமார், மற்றும் அலுவல்சார் உறுப்பினர்/ ஆணையர் திருமதி வி.கலையரசி, ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், துறை செயலாளர் ஈ. சரவணவேல்ராஜ், ஆகியோர் உடனிருந்தனர்.

### மீன்வளம் – மீனவர் நலத்துறை சார்பில்

# ரூ.98.92 கோடியில் மேம்படுத்தப்பட்ட மீன்பிடித் துறைமுகங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, டிச. 9-**

**மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில் ரூ.98.92 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளம் மற்றும் புதிய மீன் விதைப் பண்ணை ஆகியவற்றை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.12.2025) தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 98 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளம் மற்றும் புதிய மீன் விதைப் பண்ணை ஆகியவற்றை திறந்து வைத்தார்.

மீன்வளத்தை பாதுகாத்தல், நிலைக்கத்தக்க மீன்பிடிப்பு, மீன் வளர்ப்பு நடைமுறைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல், மீன்பிடி படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்பிடி இடத்திலிருந்து அதன் நுகர்வு வரை சுகாதாரமான முறையில் கையாளப்படுவதை உறுதி செய்வதற்கும் மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், கரையோர வசதிகள், மீன் சந்தைகள் போன்ற நவீன உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மீன்பிடி தடைகாலங்களில் மீனவர்களுக்கு நிதியுதவி, மீன்பிடி படகுகளுக்கு வரிவிலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் வழங்குதல், பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்குதல், புதிய சூரை மீன்பிடி தூண்டில் மற்றும் செவுள் வலை விசைப்படகுகளை வாங்கிட மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மீனவ மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திடவும், சமூக பாதுகாப்பினை உறுதி செய்திடவும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

**மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளம் மற்றும் புதிய மீன் விதைப்பண்ணை ஆகியவற்றை திறந்து வைத்தல்**

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காப்பட்டணம் மீன்பிடி துறைமுகத்தில் 60 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ள கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பெரியநாயகி தெரு மீனவ கிராமத்தில் 26 கோடி ரூபாய் செலவில் தூண்டில் வளைவுடன் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளம், மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியில் 10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகம், தென்காசி மாவட்டம், கடானா கிராமத்தில் 2 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அரசு மீன் விதைப் பண்ணை;

**மொத்தம் 98 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் 4 முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**திறந்து வைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளம் மற்றும் புதிய மீன் விதைப்பண்ணை பற்றிய விவரங்கள்**

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காப்பட்டணம் மீன்பிடி துறைமுகத்தில் 375 மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள படகு அணையும் தளம், 110 மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள படகு அணையும் சுவர், மீன் ஏலக்கூடம், மீன் பதப்படுத்தும் கூடம், குளிர் பதன கூடம், வாய்க்கால் பாலம் மற்றும் சாலை ஆகிய கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டதால் 68,300 மீனவர்கள் பயன்பெறுவர் மற்றும் 850 விசைப்படகுகள், 4,800 நாட்டு படகுகள் பாதுகாப்பாக நிறுத்த இயலும்.

கன்னியாகுமரி மாவட்டம், பெரியநாயகி தெரு மீன் இறங்குதளத்தில் 235 மீட்டர் நீளத்திற்கு நீட்டப்பட்டுள்ள தூண்டில் வளைவு மற்றும் வலை பின்னும் கூடம் ஆகிய வசதிகள் மேற்கொள்ளப்பட்டதால் 13,021 மீனவர்கள் பயன்பெறுவர் மற்றும் 235 இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகள், 06 நாட்டு படகுகள் பாதுகாப்பாக நிறுத்த இயலும்.

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி மீன்பிடி துறைமுகத்தில் 350 மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள படகு அணையும் சுவர், கூடுதல் மீன் ஏலக் கூடம், கூடுதல் வலைப் பின்னும் கூடம், மீன் உலர்தளம், சாலை ஆகிய வசதிகள் மேற்கொள்ளப்பட்டதால் 6,073 மீனவர்கள் பயன்பெறுவர் மற்றும் 45 விசைப் படகுகள், 310 கண்ணாடி நாரிழை படகுகள் பாதுகாப்பாக நிறுத்த இயலும்.

தென்காசி மாவட்டம், கடானா அரசு மீன் விதைப் பண்ணையில் மீன் வளர்ப்பு தொட்டிகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டதால் வருடத்திற்கு 5 இலட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்து உள்நாட்டு மீன்வளத்தை உயர்த்த இயலும்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந. கௌதமன், தமிழ்நாடு மீனவர் நல வாரியத் தலைவர் முனைவர் அ. ஜோசப் ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என்.சுப்பையன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர் கே. வி.முரளிதரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய அரசின்

# தேசிய நீர் விருதுகள் பெற்ற மாவட்ட ஆட்சியர்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றனர்!

**சென்னை, டிச. 9-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (8.12.2025) தலைமைச் செயலகத்தில், ஒன்றிய அரசின் தேசிய நீர் விருதுகள், நீர் பாதுகாப்பில் பொது மக்கள் பங்களிப்பு விருதுகள் ஆகிய விருதுகளை பெற்ற திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மு. பிரதாப், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் ஜி. கிரியப்பனவர், நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. துர்காமூர்த்தி, மற்றும் ஆகியோர் சந்தித்து விருதுகளை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.**

முன்னதாக, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.ஆர். சுகுமார், மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், ஆகியோர் இவ்விருதுகளை பெற்றதற்காக மதுரையில் நேற்று முன்தினம் (7.12.2025) முதலமைச்சர் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

மழைநீர் சேகரிப்பு மற்றும் செயற்கை மறுசீரமைப்பு பணிகள் மூலம் நிலத்தடி நீரை அதிகரித்தல், புதிய நடைமுறைகளைப் பின்பற்றுதல், நீர் பயன்பாட்டு செயல்திறனை ஊக்குவித்தல், மறுசுழற்சி செய்தல் மற்றும் தண்ணீரை மீண்டும் பயன்படுத்துதல், இலக்கு பகுதிகளில் உள்ள மக்களின் பங்கேற்பு மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற முயற்சிகளை ஊக்குவிக்கும் விதமாக ஒன்றிய நீர்வளம், நதி மேம்பாடு, கங்கை புத்தாக்க துறையின் கீழ் தேசிய நீர் விருதுகள் (National Water Awards) மாநில விருதுகள், மாவட்ட அளவிலான விருதுகள், கிராம ஊராட்சிகள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், பொது சங்கங்கள், நீர் பயனர் சங்கங்கள், பெருநிறுவனங்கள், தனிநபர்கள் ஆகியோருக்கு விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கீழ் மேற்கொள்ளப்படும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் (MGNREGS), ஜல் ஜீவன் திட்டம் (JJM), 15-வது ஒன்றிய நிதிக்குழு மானியம் (CFC), 6-வது மாநில நிதிக்குழு மானியம் (SFC), சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் (MLACDS), நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டு திட்டம் (MP LADS) போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பாரம்பரிய நீர்நிலைகளான ஏரிகள், குளங்கள் மற்றும் ஊரணிகள் புனரமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், ஆறுகளின் கிளைகள் புத்தாக்கம், மழை நீர் சேகரிப்புகள் அமைத்தல், நீர் சேகரிப்பு அமைப்புகள் அமைத்தல் போன்ற நீர் பாதுகாப்பு மற்றும் நீர் வள மேம்பாட்டு பணிகளை பாராட்டி 4 மாவட்ட அளவிலான விருதுகள் மற்றும் 1 கிராம ஊராட்சி அளவிலான விருது வழங்கப்பட்டுள்ளது.

*6-வது தேசிய நீர் விருதுகள் (National Water Awards)*

| வ. எண் | அலுவலரின் பெயர் | பதவி | விருது பெற்ற பிரிவு |
|---|---|---|---|
| 1 | மரு.ஆர். சுகுமார், | மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி மாவட்டம். | திருநெல்வேலி மாவட்டம்- தமிழ் நாடு- தெற்கு மண்டலத்தில் சிறந்த மாவட்டத்திற்கான பிரிவில் வெற்றியாளர் |
| 2 | நா.சரவணன், | திட்ட இயக்குனர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருநெல்வேலி மாவட்டம். | |
| 3 | மு. பிரதாப், | மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம் . | திருவள்ளூர் மாவட்டம், ஆர் கே பேட்டை, பாலாபுரம் கிராம ஊராட்சி - தமிழ் நாடு- தேசிய அளவில் சிறந்த கிராம ஊராட்சி - 3 வது இடத்திற்கான விருது. |
| 4 | வை.ஜெயகுமார் | திட்ட இயக்குனர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவள்ளூர் மாவட்டம். | |

*நீர் பாதுகாப்பில் பொதுமக்கள் பங்களிப்பு விருதுகள் (Jan Sanchay Jan Bhagidari Awards)*

| வ. எண் | அலுவலரின் பெயர் | பதவி | விருது பெற்ற பிரிவு |
|---|---|---|---|
| 1 | பவன்குமார் ஜி. கிரியப்பனவர், | மாவட்ட ஆட்சியர், கோயம்பத்தூர் மாவட்டம். | தெற்கு மண்டலத்தில் சிறந்த மாவட்டத்திற்கான பிரிவு வகை 3 ல் -2 வது இடம். |
| 2 | சங்கேத் பல்வந்த் வாகே., | கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி)/ திட்ட இயக்குனர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கோயம்பத்தூர் மாவட்டம். | |
| 3 | திருமதி. துர்காமூர்த்தி, | மாவட்ட ஆட்சியர், நாமக்கல் மாவட்டம் . | தெற்கு மண்டலத்தில் சிறந்த மாவட்டத்திற்கான பிரிவு வகை 3 ல் - 10 வது இடம். |
| 4 | சு. வடிவேல் | திட்ட இயக்குனர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல் மாவட்டம். | |
| 5 | சிம்ரன்ஜீத் சிங் காலோன், | மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் மாவட்டம் . | தெற்கு மண்டலத்தில் சிறந்த மாவட்டத்திற்கான பிரிவு வகை 3 ல் -13 வது இடம். |
| 6 | திவ்யான்ஷு நிகம், | கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி)/ திட்ட இயக்குனர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராமநாதபுரம் மாவட்டம். | |

2024-25 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு 6-வது தேசிய நீர் விருதுகள் (National Water Awards) பிரிவில் தேசிய அளவில் தெற்கு மண்டலத்தில் சிறந்த மாவட்டமாக திருநெல்வேலி மாவட்டம் தேர்வு செய்யப்பட்டது. மேலும், திருவள்ளூர் மாவட்டம்,

ஆர்.கே. பேட்டை, பாலாபுரம் கிராம ஊராட்சி தேசிய அளவில் சிறந்த கிராம ஊராட்சிக்காக 3-வது இடத்திற்கான விருதை பெற்றுள்ளது. அத்துடன் நீர் பாதுகாப்பில் பொதுமக்கள் பங்களிப்பு விருதுகள் (Jan Sanchay Jan Bhagidari Awards) பிரிவின் கீழ் சிறந்த மாவட்டத்திற்கான விருதுகளை கோயம்புத்தூர் (3வது இடம்), நாமக்கல் (10வது இடம்), இராமநாதபுரம் (13 வது இடம்) மாவட்டங்கள் பெற்றுள்ளன.

புது தில்லியில் உள்ள விக்யான் பவனில் 18.11.2025 அன்று நடைபெற்ற விருது வழங்கும் விழாவில், விருது பெற்ற மாவட்டங்களை சேர்ந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பங்கேற்று இந்திய குடியரசு தலைவர் அவர்களிடமிருந்து கோப்பை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை பெற்றனர்.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி, ஊராட்சி ஆணையர் பா.பொன்னையா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சிறைகளில் வாடும்

# இந்திய மீனவர்களை மீட்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி,டிச. 9–

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் மீனவர்கள் பிரச்சினை தொடர்பான கேள்விகளை முன்வைத்திருந்தார்.

அதன் விபரம்,

வெவ்வேறு நாடுகளில் சிறைகளில் வாடும் இந்திய மீனவர்களின் எண்ணிக்கை, சமீபத்தில் நிகழ்ந்த கைது விவகாரம், மீனவர்களை யும், படகுகளையும் மீட்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி அவர்கள் கேட்டிருந்தார்.

இதற்கு வெளியுறவுத்துறை இணை அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் எழுத்துப்பூர்வமாக பதில் கொடுத்தார். அந்த பதிலில் கூறப்பட்டு இருப்பதாவது:

சர்வதேச கடல் எல்லைக்



கோட்டை தாண்டிச் சென்றதாகவும், இலங்கை கடல் பகுதியில் மீன்பிடித்ததாகவும் கூறி இந்திய மீனவர்கள் அவ்வப்போது இலங்கை அதிகாரிகளால் கைது செய்யப்படுகிறார்கள். 1974 ஆம் ஆண்டு இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கு இடையே எல்லை உடன்படிக்கை செய்யப்பட்டது. இது இறுதி செய்யப்படுவதற்கு முன்பு, அப்போதைய தமிழ்நாடு அரசாங்கத்திடம் மத்திய அரசு ஆலோசனைநடத்தியது.

1976 ஆம் ஆண்டு மற்றொரு ஒப்பந்தம், அப்போதைய மத்திய அரசும் அதன் இலங்கை சகாவும் 3 கடிதங்களை முறையாகப் பரிமாறிக் கொண்டதன் மூலம், இந்திய மீன்பிடி கப்பல்கள் மற்றும் மீனவர்கள் இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க நீர்நிலை கள், பிராந்தியக்கடல் மற்றும் பிரத்தியேக மண்டலம் ஆகியவற்றில் மீன்பிடிக்கக் கூடாது என்று நிபந்தனை விதித்தது. மரபுரிமையாகக் கிடைத்த இந்த சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, 2014 முதல், இந்திய மீன்பிடி சமூகத்தின் வாழ்வாதார நலன்களை நிவர்த்தி செய்ய அரசாங்கம் முயற்சித்து வருகிறது. மேலும் அதன் மனிதாபிமான அம்சங்களில் கவனம் செலுத்தி வருகிறது.

இலங்கை மீனவர்களின் நலனை உறுதி செய்வதற்கும், அவர்களை முன்கூட்டியே விடுவிப்பதற்கும், திருப்பி அனுப்புவதற்கும், இலங்கைத் தலைமையையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் அரசாங்கம் தொடர்ந்து ஈடுபடுத்தி வருகிறது. இந்திய மீனவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்த தகவல்கள் கிடைக்கும் போதெல்லாம், அரசாங்கம் உடனடியாக ராஜதந்திர வழிமுறைகள் மூலம் இந்த விஷயத்தை இலங்கை அரசாங்கத்துடன் எடுத்துச் செல்கிறது. அவர்களின் நலனையும், முன்கூட்டியே விடுவிப்பதையும் உறுதி செய்வதற்கு, இந்திய தூதரகங்கள் உடனடி நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இந்த பிரச்சி னையை மனிதாபிமான மற்றும் வாழ்வாதாரக் கவலையாகக் கருதுமாறு இலங்கை அரசாங்கத்திடம் பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எந்த சூழ்நிலையிலும் பலாத்காரத்தைப் பயன்படுத்தக்கூடாது என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மீனவர்கள் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளும் இருதரப்பு நிறுவன வழிமுறைகள் மூலம் கையாளப்படுகின்றன. எடுத்துக்காட்டாக கூட்டு அரசாங்கத்தின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய மீன்வளப் பணிக்குழு மூலம் கையாளப்படுகின்றன.

அரசாங்கத்தின் ஒருங்கிணைந்த முயற்சிகளின் விளைவாக, மே 2014 முதல் இதுவரை 3622 இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டு, தாயகம் திரும்பியுள்ளனர். கூடுதலாக, கடந்த ஆகஸ்டு மாதம் இலங்கை நீதிமன்றங்களால் விடுவிக்கப் பட்ட படகுகளை ஆய்வு செய்து மீட்க இந்திய மீனவர்கள் குழு வருகை தருவதற்கு அரசாங்கம் வசதி செய்தது.

2025 நவம்பர் மாதம் 27ந் தேதி நிலவரப்படி இலங்கை சிறையில் 66 மீனவர்களும், பாகிஸ்தான் சிறையில் 200 பேரும்,. வங்காளதேசம் சிறையில் 70 பேரும், ஈராக் சிறையில் 2 பேரும் உள்ளனர்.

இவ்வாறு அந்த பதிலில் கூறப்பட்டு உள்ளது.

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு

ஈரோடு வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கே.கே. செல்வம் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600018
நாள்- 7.12.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### பா.ஜ.வினர் வீசும் பந்துகளெல்லாம் 'திராவிட ஆட்சி' எனும் பேட்டில் பட்டு சிக்சர்களாகின்றன!

# 'திராவிட மாடல்' அரசே சாம்பியன் பட்டத்தை வெல்லப் போகிறது!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, டிச.9–

' திராவிட மாடல்' அரசின் வளர்ச்சித் திட்டங்களை சகித்துக் கொள்ள முடியாமல் பா.ஜ.வினர் வீசும் பந்துகளெல்லாம் திராவிட ஆட்சி எனும் பேட்டில் பட்டு சிக்சர்களாகின்றன. போட்டி எப்படியிருப்பினும் 'திராவிட மாடல்' அரசே சாம்பியன் பட்டத்தை வெல்லப் போகிறது என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கருத்து தெரிவித்துள்ளது.

அது வருமாறு:–

தூங்கா நகரம் எனப்படும் மதுரையை மையமாக கொண்டு மத துவேஷத்திற்கு திரியிடும் முயற்சிகளை பாஜ மற்றும் இந்து அமைப்புகள் தற்போது மேற்கொண்டு வருகின்றன. மதசார்பின்மைக்கு பெயர்போன தமிழ்நாட்டில் எப்படியாவது ஒரு மதக்கலவரத்தை ஏற்படுத்தி, ஆட்சிக் கட்டிலை கைப்பற்ற பாஜவின் பாசங்குகள் இம்முறையும் எடுபடவில்லை. மதுரை மக்களுக்கு வளர்ச்சி அடிப்படையில் துரும்பைக் கூட கிள்ளிப் போடாத பாஜ, இப்போது திருப்பரங்குன்றம் தீபத்திற்காக மலைக்கும், ஐகோர்ட்டுக்கும் பயணிப்பதை பார்த்தால், அதன் வேகம் ஆச்சரியப்பட வைக்கிறது.

அயோத்தியில் ராமர் கோயிலை முன் வைத்து இந்தியாவில் மெல்ல மெல்ல கிளை பரப்பிய பாஜவிற்கு,




இப்போதும் தமிழகமும், கேரளாவும் முடவனின் கைக்கு எட்டாத கொம்புத்தேனாக இருக்கின்றன. எப்படியாவது தங்கள் மதவாத பருப்பை மக்கள் மத்தியில் வேக வைத்திட வேண்டும் என்ற வெறியில் இப்போது தீபத்தை முன்னிறுத்தி அரசியலை பாஜ மேற்கொண்டு வருகிறது. வளர்ச்சி அரசியல் என்பது பாஜவிற்கு எப்போதும் பழக்கப்பட்டதல்ல.

தமிழகத்தில் எப்படியாவது காலூன்ற நினைக்கும் பாஜ, திராவிட மாடல் ஆட்சியிடம் சில பாடங்களை கற்றுக் கொள்வது நல்லது. மதுரையில் நடந்த அரசு விழாவில் நேற்று மட்டுமே 1.41 லட்சம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ரூ.36 ஆயிரத்து 660 கோடி முதலீட்டிற்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. தமிழர்களின் பண்பாடு, கலாசாரம் தோய்ந்த ஓவியங்களால் நிரம்பிய வீரமங்கை வேலுநாச்சியார் பாலத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்துள்ளார்.

முதலீட்டின் முதல் முகவரியாக தமிழ்நாட்டை மாற்றி, வெளிநாட்டு முதலீடுகளை எல்லாம் இங்கு ஈர்த்து வர முதல்வர் கொண்டு வரும் நடவடிக்கைகள் எல்லாம் பொதுமக்களின் பாராட்டுக்களை பெற்று வருகிறது. வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழகத்தின் மனிதவள திறன், உள்கட்டமைப்புகள், பொருளாதார வளர்ச்சி மேம்பட்டு வருகிறது. மதுரைக்கு கோயில் நகரம் என்ற பெருமை மட்டும் போதாது.

அதை தொழில் நகரமாகவும் மாற்றுவோம் என திமுக அரசின் செயல்பாடுகள் மெச்சத்தக்க வகையில் உள்ளன. விருதுநகரில் உருவாகி வரும் ஜவுளி பூங்காவால் ஒரு லட்சம் பேருக்கு வேலை உத்தரவாதம் தரப்பட்டுள்ளது. இத்தகைய வளர்ச்சி பணிகளில் எதிலுமே பங்கெடுக்காத பாஜ, இப்போது புளித்து போன மத அரசியலை முன்னிறுத்தி, மதுரையில் தன்னை வளர்த்துக் கொள்ள முற்படுவது வேடிக்கையிலும் வேடிக்கை.

தூங்கா நகரத்தில் வசிக்கும் மக்கள் அனைவரும் எப்போதும் விழிப்புணர்வுடன் இருப்பர். கீழடியில் தமிழர்களின் தொன்மை நாகரீகத்தை மறைக்க பாஜ எவ்வளவு முயன்றாலும் அது எடுபடாமல் போனது. கீழடியின் அடிச்சுவடுகள் முழுமையாக கண்டறியப்பட்டால், இந்திய வரலாற்றையே தமிழகத்தில் இருந்து எழுத தொடங்க வேண்டும். இந்நிலையில் இத்தகைய தூங்கா நகரின் வரலாற்று சிறப்பு மிக்க பக்கங்களை விடுத்து, பாஜ வழக்கம்போல் மத அரசியலை முன்னெடுப்பது துரதிர்ஷ்டம்.

தமிழக முதல்வரே சொல்வது போல் வன்முறை அரசியலை முன்னெடுத்தால், பொதுமக்கள் பாஜவின் புடதியில் அடித்து விரட்டுவர். தென்மாவட்டங்களுக்கான திராவிட மாடல் அரசின் வளர்ச்சி திட்டங்களை சகித்துக் கொள்ளாமல் பாஜவினர் வீசும் பந்துகள் எல்லாம் திராவிட ஆட்சி எனும் பேட்டில் பட்டு சிக்சர்களாக மாறி வருகின்றன. போட்டி எப்படியிருப்பினும் திராவிட மாடல் அரசே சாம்பியன் பட்டத்தை வெல்லப்போகிறது. மதுரை மக்கள் பாஜவின் தலையில் ஓங்கி குட்டப்போகும் காலம் இன்னும் 5 மாதங்களில் வருகிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.